# பொருளாதாரக் கட்டமைப்பு நெறி: அறிஞர்களும் வள்ளுவரும்

**தி. கமலி**

மனிதரது தேவைகள் எண்ணில் அடங்காதவை. தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான கைமுதலோ வெகுவெகு குறைவானது. கையில் இருப்பதைத் கொண்டு சிறந்ததைத் தேர்வு செய்து வாழும் வாழ்வு ‘செம்மையான வாழ்வு’ என்னும் மனப்போக்கு மனிதரிடம் காணத்தகும் ஒன்றாகும். நமக்குக எண்ணற்ற விருப்பங்கள் இருந்தாலும், எல்லா விருப்பங்களும் சம முக்கியத்துவம் உடையன என்பதற்குககக இல்லை.

- அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய விருப்பங்கள்.
- யாவும் நலமாக அமைந்தால், நிறைவேறக் கூடிய விருப்பங்கள்.
- இன்றில்லாவிடினும், வாழ்வில் என்றாவது ஒரு நாள் நிறைவேறக் கூடும் விருப்பங்கள்.
- உயிர் உள்ளவரை முயற்சித்தால் மட்டுமே நிறைவேற்ற முடிகின்ற விருப்பங்கள்

என்று விருப்பங்களை வகைப்படுத்தவியலும், எதை நாம் விலையாகத் தந்து, எதை நாம் பெறுவதன் மூலம் எப்படி நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறோம் ? எத்தகு விருப்பங்கள் நம்மால் நிறைவடைகிறது என்று பரிசீலித்தல் மிகவும் இன்றியமையாதது,

> “கொடுப்பதூஉம் துய்ப்பதூம் இல்லார்க்கு அடுக்கிய
> கோடிஉண் டாயினும் இல்
>
> (திருக்குறள் 101-1005)

செல்வத்தைக் கொண்டு வேண்டியதைப் பெறலாம். விரும்பியதைத் துய்க்கலாம், தனது செல்வத்தைப் பிறருக்குக் கொடுப்பதன் மூலம், அவர் வேண்டியதைப் பெற உதவலாம். அடுத்தவரது விருப்பம் நிறைவேறத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள உதவலாம். அதுவே செல்வத்தின் இயல்பு ஆகும். எனவேதான், செல்வம் குறித்த அறிவியல்” (Science of wealth) என்று,’ பொருளாதாரம்’ (Economics) சமூக அறிவியலாளர்களால் பதினெட்டாம் நூற்றாண்டில் வரையறை செய்யப்பட்டது. ‘சமூக அறிவியலின் அரசி’ (Queen of the social science) என்றும் பெயரிடப்பட்டது. செல்வமே அடிப்படை, ஒன்றைப் பெறுவதற்குத் தரும் விலை பணமாக. பொருளாகத் தரப்படுகையில், மனித உறவுகளில் பணம் அல்லது செல்வம் வகிக்கும் பங்கு பற்றிப் பரிசீலிக்கும் அறிவியல் ‘பொருளாதாரம்” எனக் கிளைத்தது.

‘பிறர்க்குக் கொடுக்கவோ, தனக்கு வேண்டியதைத் தான் பெற்றுத் துய்க்கவோ செய்யாதவருக்குச் செல்வம் அடுக்கிய கோடிகளாக இருப்பினும் அச்செல்வத்தால் யாதொரு பயனும் இல்லாததால் அச்செல்வம் இல்லாமையையே ஒக்கும்’ என்று செல்வத்தின் பயனை வள்ளுவம் மதிப்பிடுகிறது.

ஆடம் ஸ்மித் (Adam smith) ஆல்பிரட் மார்சல் (Alfred Marshall) லயன்ஸ் இராபின்ஸ் (Lionel Robbins) சாமுவேல்சன் (Samuelson) எனும் நால்வரும், ‘பொருளாதாரம்’ எனும் அறிவுத்துறைக் கட்டமைப்பைத் தோற்றுவித்த நான்கு அறிவுத் தூண்களாகக் கருதுதற்குரியவர் ஆவர். வள்ளுவம் முன்வைக்கும் பொருளியல் கருத்தாக்கங்கள் இந்நால்வர்தம் கருத்தாக்கங்களுடன் ஒப்ப நோக்கிப் பொருந்தும் இயல்பினையும், பொருந்தாத இயல்பினையும் துல்லியமாக மதிப்பீடு செய்வது இக்கட்டுரையின் இலக்கு ஆகும்.

**ஆடம் ஸ்மித்தும் வள்ளுவரும் :-**

ஆடம் ஸ்மித்தின், ‘ செல்வ வரையறை (wealth definition ) முதலாவது , தேசங்களின், ‘செல்வத்தின் இயல்பு மற்றும் காரணங்கள் குறித்த பரிசீலனை (An Enquiry into the Nature and causes of wealth of Nations ) என்ற நூலை 1776இல் வெளியிட்டார். தேசங்கள் குவிக்கும் செல்வத்தின் இயல்பு மற்றும் செல்வக் குவிப்பிற்கான

முறைகள் பற்றி ஆராயும் அறிவுத் துறையே பொருளாதாரம்' என்று ஆடம் ஸ்மித் வரையறுத்தார். செல்வத்தைக் குவிப்பதே மனிதரது முக்கியமான செயல் என்பது அவரது அசைக்க முடியாத கருத்தாக இருந்தது, 'செல்வஞ் சேர்க்கும் வழிமுறைகளைப் பரிசீலிக்கும் அறிவியலே பொருளாதாரம்' எனும் அவரது கொள்கை செவ்வியல் பொருளாதாரக் கொள்கை எனப்படுகிறது.

அன்பு ஓரீஇத் தற்செற்று அறம் நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் (குறள் . 101.1009)

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
(குறள் .57.566)

அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம்
(குறள் .101.1007)

அலைமேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து
(குறள் .56.551)

கோலொடு நின்றான் இரவு (குறள் .56.552)

என்று செல்வம் குவித்தலையே வாழ்வின் இலக்காக எண்ணிச் செயல்படுவோரைச் சுட்டுகிறது வள்ளுவம், 'அரசியல் பொருளாதாரத்தின் (political economy) இலக்கு எந்தெந்த வழியில் பொருளைக் குவிப்பது, பகிர்வது, நுகர்வது 'என்று காட்டுவது' என்று ஜே.பி.சே (J.B.say ) ஆடம் ஸ்மித்தின் கொள்கையை வழி மொழிவார்.

ஒண்பொருளை ஈட்டும் இலக்கு மேலோங்க, மனம் அன்பு காட்டுவதை விலக்கி விடுகிறது. அறத்தைப் பரிசீலிக்க மறுத்து விடுகிறது. தனது தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய விரும்பாது புறக்கணிக்கிறது.

- ❖ தன்னைக் காணும் எவரும் பொருள் கொடு' என்று கேட்டு விடுவாரோ என்றஅச்சத்தில் யாரையும் காண மறுக்கிறது.
- ❖ அரிதாகக் காண நேர்ந்தாலும், 'கடுகடுத்த முகத்தையே' தரித்துக் கொள்கிறது
- ❖ குடிமக்களை வருத்துவதை மேற்கொண்டு, பொருளைப் பெறுவதற்காக முறையற்ற செயலைச் செய்ய வேந்நரைப் பொருளாசை தூண்டுகிறது.
- ❖அதிகாரமும், ஆட்சியுரிமையும் அரசனை முறையின்றிப் பொருள் பறிக்கத் தூண்டுகிறது.

என்று செல்வத்தைக் குவிக்கும் ஆவல் எத்தகு வழிமுறைகளை எல்லாம் கையாளத் துணிகிறது - என்று வள்ளுவர் விளக்கமளிப்பது கருதத் தக்கது, 'செல்வத்தைக் குவித்தல் பற்றிய நடைமுறை அறிவியல் 'என்று ஜே.எஸ்.மில் (J.S.Mill) கூறுகிறார். 'செல்வக் குவிப்புடன் தொடர்புடைய அறிவுத்தளம் என்று எ.ஃ.ப் . ஏ.வாக்கர் (F.A. Walker) விவரிக்கிறார். இங்ஙனம் ஆடம் ஸ்மித்தும், அவரது குழுவினரும், 'செல்வத்தை' மையப்படுத்தியிருப்பதைக் கார்லைல் (Carlyle) ரஸ்கின் (Ruskin) ரஸ்ஸல் (russel) ஆகியோர் மறுத்துரைப்பர். அம்மறுப்புரைகள் வருமாறு:-

- ❖ செல்வம் மனிதரைத் தன்னலமிக்கவராக மாற்றிவிடும்.
- ❖ செல்வம் மட்டுமே போதாது. அது மட்டுமே முற்ற முடிவாகி விடாது.
- ❖ செல்வத்தால் பெறும் மனித நலம் பற்றி ஆடம்ஸ்மித்தோ, அவரதுசீடர்களோ சிந்திக்கவே இல்லை.
- ❖ செல்வத்தைக் குவிக்கும் செயல்பாடுகளுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதே அல்லாமல், பிற மனித முயற்சி, ஈடுபாடு, விருப்பங்களுக்கான தளங்கள் பரிசீலிக்கப்படவில்லை.

என்றெல்லாம் விமரிசனங்கள் முன்வைக்கப்படுகின்றன. தொழில் புரட்சியும், அதையொட்டிச் செல்வ குவிப்பும் முன்னிறுத்தப்பட்ட காலகட்டத்தில் இங்கிலாந்தில் ஆடம் ஸ்மித் எழுதிய நூலாதலின், 'செல்வம் பற்றிய அறிவியலாக' (science of wealth) பொருளியலை வரையறுத்துள்ளது' என்று சமாதானம் கூறுவர் ஒரு சாரார்.

"ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான்' (குறள் .101 .1006)

தானும் நுகராமல், தகுதி உடையவர்க்கு ஒன்று கூடத் தராமலும் சுயநலமிக்கவனாய் வாழ்பவனின் பெருஞ்செல்வம் ஏதம்' நோய்' என்று சுயநலத்தினது செல்வத்தைச் சுட்டுகிறது வள்ளுவம். செல்வம் மனிதரைத் தன்னலமிக்கவராக மாற்றிவிடுவதை உணர்ந்து எச்சரிக்கிறது.

பொருளானாம் எல்லாம் என்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு (குறள் .101 .1002)

'செல்வத்தால் எல்லாம் ஆகும்' என்று விடாமல் பற்றிக் கொண்டிருப்பவன் எந்தச் சிறப்பும் இல்லாத இழிபிறப்பினன்' என்று செல்வம் மட்டுமே போதாது. அது மட்டுமே முற்ற முடிவாகி விடாது என்பதைச் சுட்டுகிறது வள்ளுவம்.

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு (குறள் .36. 351)

நலம் தருவது பொருள். நலமொன்றும் தராதது பொருளன்று: எது பொருள்? எது பொருளன்று என்று உணரும் தெளிவு வேண்டும் மனிதருக்கு என்று பொருளால் பெறும் மனித நலம் வள்ளுவரால் சுட்டப்படுகிறது.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்' (திருக்குறள்.21.216)

ஈர நெஞ்சினனிடம் உள்ள செல்வம் ஊர் நடுவே செழித்து வளர்ந்த மரம் பழுத்துக் குலுங்குவது போல எல்லோருக்கும் பயன்படும்' என்று செல்வத்தால் பெறும் மனித நலம் சுட்டப்பட்டுள்ளது.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள (குறள் .25.241)

என்று தலையாய் செல்வமாக அருளுடைமைக் குறிக்கும் வள்ளுவம், 'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால் பொன்றாது நிற்பது ஒன்றில்லை' என்று புகழ் பெறுவதில் கொள்ள வேண்டிய விருப்பம், ஈடுபாடு, அதற்கான மனித முயற்சி என்று செல்வத்தைக் குவிக்கும் செயல்பாடுகள் தவிர்த்த பிற தளங்களையும் முன்னிறுத்துவதைக் காண முடிகிறது.

ஆல்பிரட் மார்ஷலும் வள்ளுவரும்:- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆல்பிரட் மார்ஷல் (Alfred marshall) 'செல்வம்' எனும் மையப்புள்ளிலிருந்து விலக்கி, மனித நலத்தை' அடையாளப்படுத்துகிறார். 1890 இல் ஆல்பிரட் மார்ஷல், 'பொருளாதார நெறிகள்' (principles of Economics) எனும் நூலை வெளியிட்டார். 'பொருளாதாரம் என்பது மனித இனத்தின் வாணிக வாழ்வைப் பற்றியது. அது நலவாழ்வைப் பெறுவதற்கான மூலாதார வளங்களைப் பயன்படுத்தும் தனிநபர் மற்றும் சமூகஞ்சார் செயல்பாட்டினை நுணுக்கமாகப் பரிசீலிப்பது என்று மார்சல் வரையறை தருகிறார்.

- பொருளாதாரம் மனிதர்களைப் பற்றி ஆராய்வது.
- மனிதரது வாழ்வில், பொருளியல் கோணங்களைப் பரிசீலிப்பது.
- மானுட நலம் குறிப்பாக மூலாதார வளம் குறித்து ஆராய்வது

- மக்களின் பொருளாதார நலவாழ்வை மேம்படுத்துவதில் தனிநபர் மற்றும் சமூகக் செயல் பற்றி அறிய முற்படுவது.

என்று மார்சல், மனித வாழ்வின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் மூலாதார வளங்களைக் கணக்கில் கொள்ளச் செய்வதால், 'மூலாதார வளங்குறித்த பொருளியல் வரையறை' (Material welfare definition of economics) என்று அவரது வரையறை குறிப்பிடப்படுகிறது. மார்சலின் அடியொற்றி எட்வின் கேனன் (Edwin cannan) 'மனித இனம் சார்ந்திருக்கும் மூலாதார வளங்களின் பொதுக் காரணங்களை விளக்குவதே அரசியல் பொருளாதாரத்தின் இலக்கு' என்கிறார். பிகோ (pigou), 'பாய் பொருண்மை' . சமூக நலத்தின் ஒரு பகுதி பொருளாதார நலம். பணம் எனும் அளவுகோலினால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சமூகநலத்தைக் கொண்டு வர முடியும்' என்கிறார். இங்ஙனம் ஆல்பிரட் மார்சல், எட்வின் கேனன், பிகோ முதலானோர்', மனிதரையும், மனித நலத்தையும். முன்னிலைப்படுத்தினர்.

"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று (குறள். 96.955)

பிறர்க்கு ஈவதால் தன் பொருள் அளவில் சுருங்குவதைக் கண்டும், பழங்குடியில் பிறந்தவர்கள் கொடுக்கும் பண்மை விட்டுவிடுவதில்லை' என்று பொருளைக் கையாளும் மனிதர்களது குடிச்சிறப்பின் தாக்கத்தை வள்ளுவம் குறிக்கிறது.

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் (குறள். 94.954)

பலகோடிப் பொருள்களைப் பெற்றாலும் குடிப்பிறந்தார், சிறப்புக் குன்றும் செயல்களைச் செய்யமாட்டார்கள் 'என்று மனிதரது வாழ்வில், 'பொருளியல் பெறுமிடத்தை' மதிப்பிடுகிறது வள்ளுவம்.

"வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை' (குறள் 52.512)

வருவாய் வரும் வழிகளை விரிவாக்கி, வளங்களைப் பெருக்கி, இடையூறுகளை ஆராய்ந்து நீக்கிடும் செயல்திறன்மானுட நலத்துக்கு வழிசெய்யும் மூலாதார வளம் பெருக்கும் வினைத்திறனை வள்ளுவம் முன்னிலைப்படுத்துகிறது.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 22.212)

முயன்று திரட்டிய பொருள் எல்லாம் தகுதியுடையார் நலனுக்கு உதவிடும் பொருட்டுப் பயன்பட வேண்டும் என்று சமூகச்செயல் விதந்துரைக்கப்படுகிறது.

ஆல்பிரட் மார்சலின்நலநோக்கு கீழ்க்காணும் தளங்களில் விமரிசிக்கப்படுகின்றது.

- பேராசிரியர் இராபின்ஸ், (Prof Robbins) 'ஆல்பிரட் மார்சலின் நலநோக்கு வரையறை, மூலாதார வளங்களை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. மூலாதார வளஞ்சாராப் பணிகளைப் பரிசீலிக்கவில்லை. பொருளாதாரம் என்பது மூலாதார வளம் மற்றும் மூலாதார வளஞ்சாராப் பணிகள்' எனுமிவற்றைப் பரிசீலிப்பது. ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள்ஆகியோரது பணிகள் வளஞ்சாரா- ஆனால் இன்றியமையாப் பணிகளாகும். பொருளாதாரத்தில் இன்றியமையாது இடம் பெறுபவை. மார்சல் இவற்றைக் கணக்கில் கொள்ளவில்லை' என்று விமரிசிக்கிறார்.
- 'மூலாதார வளம்' என்ற சொல் பயன்பாட்டையே இராபின்ஸ் வினாவிற்கு உட்படுத்துகிறார். சில மூலாதார வளங்கள்' எவ்வித நலத்தையோ, வளத்தையோ தராதனவாக' சான்றாக, 'மதுபானத் தொழிற்சாலைகளின் உற்பத்தி, அபரிமிதக் கஞ்சாப் பயிர் விளைச்சல்' போல்வன நிச்சயம் பொருளாதார வளங்கள்தாம்.

ஆனால் அவை நலத்தைத் தருவதில்லையே! சமூக நலத்தைச் சீர்குலையவன்றோ செய்கின்றன என்கிறார்.

- 'நலம்' என்பதை எண்ணியல் பூர்வமாகத் துல்லியமாகக் கணக்கிட முடியுமா? ஒருவர் 'நலம்' என்று கருதுவது மற்றவர் கருதும்,' நலத்'தில் இருந்து வேறுபடுகிறதே! ஒரு காலத்தில் நலம் பயப்பதாகக் கொள்ளப்பட்டது மற்றொரு காலத்தில் நலம் பயப்பதாகக் கருதப்படுவதில்லையே, இத்தகு குழப்பமும், தெளிவற்ற கருத்தாக்கத்தை எங்ஙனம் பொருளியல் வரையறையில் ஏற்றுக் கொள்ள முடியும்? என்று வாதிடுகிறார்.

இத்தகு விமரிசனங்களால் மார்சலின் நல நோக்கு வரையறை ஏற்கவியலாததாகிப் போனது. 'செல்வக் குவிப்பு' பற்றிய அறிவியலே பொருளாதாரம்' என்றிருந்த வரையறையைத் தகர்ந்து,' மனித இனத்தின் நலத்தையும் பரிசீலிப்பதாக விரிவுபடுத்திய சிறப்பு ஆல்பிரட் மார்சலுக்கு இருப்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
"வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள்.95.948)

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி யாது? என்று முறையாக அறிந்து சிகிச்சை செய்தல் பற்றிக் குறள் கூறுகிறது. அற்றால் , அளவறிந்து உண்க. அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு (குறள் 95.943) என்று நீண்ட நாள் நலத்துடன் வாழும் முறை பற்றியும் சிந்திக்கிறது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (குறள் 40.391)

பிழை இல்லாதவற்றைக் குறையின்றிக் கற்று, கற்றவண்ணம் வாழ்தலின் அவசியத்தைச் சுட்டுகிறது. 'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல் கற்றாரோ டேனை யவர் (திருக்குறள் 41-410) என்று கற்றவருக்கும், கல்லாதவருக்கும் உள்ள வேறுபாடு மனிதருக்கும் விலங்குகளுக்கும் இடையிலான வேறுபாட்டை ஒக்கும்' என்கிறது.

வள்ளுவரது நலநோக்கு, 'மூலாதார வளங்களையும் மூலாதார வளஞ்சாராப் பணிகளான ஆசிரியப்பணி, மருத்துவப்பணி, கற்றலின் அவசியம், நீண்டநாள் வாழுமுறை போன்ற நலஞ்சார்ந்தனவற்றையும் கணக்கில் கொண்டிருப்பது கருதற்குரியது.

"பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது' (குறள் 94.938)

பொருளைப் பறித்துப் பொய்யனாக்கி, அருள் நெஞ்சத்தை மாற்றித் துன்ப இருளில் உழலச் செய்யும் சூது' என்று 'ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர், பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் சூதுக் கழகம்' என்று எவ்வித நலத்தையோ, வளத்தையோ தராத சூது வணிகத்தை வன்மையாக விமரிசிக்கிறது வள்ளுவம். வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம் தூண்டிற்பொன் மீன் விழுங்கி அற்று (குறள் 94.932) என்று, 'நலத்தைத் தராது, சீர்குலைத்து விடும் என்றே எச்சரிக்கைக் காணலாம்.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் (குறள் 76.751)

மதிக்கத்தகு பண்புகள் பெற்றிராதவர்களையும், மதிக்கக் கூடிய அளவுக்கு உயர்த்திவிடும் தன்மை வாய்ந்து பொருள் என்று, 'பொருள் தரும் நலம்' சொல்லப்படுகிறது. இவ்வரையறை இன்றளவும் பொருந்துவதாய் உள்ளது.

"உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள் .76.756)

வரி, சுங்கம், வெற்றி கொள்ளப்பட்ட பகை நாடு செலுத்தும் கப்பமும் அரசருக்குரிய பொருள் ' என்ற வரையறை அக்காலத்திற்குப் பொருத்தமாக இருந்தது. இக்காலத்துப் பொருந்தாதுள்ளது. குவிக்கும் செல்வத்தால் மனித இனம் பெறும் நலத்தையும் ஒருங்கே வள்ளுவர் பரிசீலிக்க முற்பட்டிருப்பது கவனித்தற்குரியது.

இலயனல் இராபின்சும் வள்ளுவரும் :- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலயனல் இராபின்சு (Lionel Robbins) புதிய வரையறையைத் தந்தார். அது , 'கிடைப்பருமை வரையறை'(Searcity definition) என்று பிரபலமாக வழங்கப்படுகிறது. 1932 இல், 'பொருளாதார அறிவியலின் இயல்பும், குறிக்கத்தகு தன்மையும்' (The Nature and significance of Economic science) என்ற தனது நூலை வெளியிட்டார், 'மாற்றுப் பயன்களைக் கொண்ட, கிடைப்பருமை மிக்க வழிமுறைகளுக்கும், முடிவுகளுக்கும் இடையிலான உறவுநிலையாக, மனித நடத்தையைப் பரிசீலிக்கும் அறிவியல் பொருளாதாரம்' என்று இராபின்சு வரையறுத்துள்ளார்.

இதன் அடித்தளக் கருத்தாக்கங்கள் வருமாறு:

- 'முடிவுகள' என்பன இங்கு, 'மனிதரது தேவைகளை, ஆசைகளை, விருப்பங்களைக் குறிப்பன. அவை எண்ணிலடங்கா. ஒரு தேவையைப் பூர்த்தி செய்தால் அது மற்றொரு தேவைக்கு வழிவகுக்கும். இப்படி விரிந்து கொண்டே செல்லும் பன்முக இயல்பினால் எல்லாத் தேவைகளும் முற்றிலுமாக நிறைவேற்றப்பட இயலாத நிலையே யாண்டும் நிலவுகிறது.
- கிடைப்பருமை உடைய வழிமுறைகள் என்பன தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைக் குறிப்பன. இந்நிதி ஆதாரங்கள் நிச்சயம் கட்டுக்குட்பட்டவையே. நம் தேவைகளுடன் ஒப்பிடுகையில் கிடைப்பருமை உடையவையே. எனவேதான் ஒவ்வொருக்கும், 'தேர்வு' செய்து தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முயலுகிறோம். மில்டன் ப்ரிட்மன் (Milton priedman) நிதி ஆதாரங்கள் மட்டும் அரியனவாக இல்லாதிருப்பின், ஒரு சிக்கல் கூட எழ வாய்ப்பே இராது : பரிபூரணம் ஏற்பட்டிருக்கும்' என்பார்.

தேவைப்படும் அளவை விடக் குறைந்த அளவிலேயே ஒரு பொருள் கிடைக்கும் பட்சத்தில் அங்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. நூறு புத்தகங்கள் நூறு மாணவர்களுக்குத் தேவைப்படும் போது, கையிருப்பு ஐந்து புத்தகங்கள்தாம்' என்ற நிலை இருந்தால் அங்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

* மாற்றுப் பயன்கள்', கிடைப்பருமை உடைய நிதி ஆதாரங்கள் மாற்றுப் பயன்களுக்கு இடமளிக்கின்றன. சான்றாக, நீர் வளம் மிக்க நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நிலை, நீர் பற்றாக்குறை, கடும் வறட்சியால் மாற்றம் பெற்று, நிலங்கள் கூறிடப்பட்டு, வீடு கட்டும் மலைகளாக்கப்படுவதைக் குறிப்பிடலாம். ஒன்றைப் பயன்படுத்துவதில் நேரும்

"சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றதாற் பெற்ற பயன் (திருக்குறள் 53.524)

தம் சுற்றத்தார் தம்மை அன்புடன் சூழ்ந்து நிற்க வாழும் வாழ்க்கையே ஒருவன் பெற்ற செல்வத்தினால் கிடைக்கும் பயன் என்று பொருள் நிரம்பப் பெற்ற மனிதர்கள் , சுற்றத்தால் சுற்றப்பட்டு வாழும் வாழ்வை அவாவுதல் வள்ளுவத்தால் சொல்லப்பட்டுள்ளது.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு (திருக்குறள் 76. 752)

இவ்வுலகில் பொருள் இல்லாதிருப்பவர் அனேகர். எனவே பொருள் இல்லாதவரை எல்லோரும் தூற்றுவர். எவரும் மதிக்க மாட்டார்கள். அதே சமயம் செல்வராய் இருப்பவர் வெகுசிலரே. எனவே வெகு சிலராய் இருக்கும் செல்வரை எல்லோரும் சிறப்பிப்பார் என்று "பொருள் கிடைப்பருமை" உடையதாக இருந்தமையைக் குறள் புலப்படுத்தும். கிடைப்பருமை போற்றத்திற்குரியதே. கிடைப்பருமை தட்டுப்பாட்டையும் தோற்றுவிக்கும்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை (திருக்குறள் 42. 411) என்று செழுமையான கருத்துக்களை செவிவழிப்பெரும் செல்வத்தை விதந்து கூறும் வள்ளுவம்.

“செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்” (குறள் 42. 412)

என்று கிடைப்பருமை காலத்து மாற்றுப்பயன் குறித்து சிந்திக்கிறது.

மாற்று பயன்களுக்கு பற்றாக்குறை நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது ஒருநிலை. எண்ணிலடங்காது விரிந்து பரந்து பெருகும் தேவைகளைக் கையிருப்பு நிதி ஆதாரத்தைக் கொண்டு நிறைவு செய்யும் சிக்கலுக்கு தீர்வு தான் என்ன?

“வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அ∴தொப்ப தில்” (திருக்குறள் 37. 363)

ஆசைகளை, விருப்பங்களை, தேவைகளை வேண்டாம் என்று நிராகரிப்பது போன்ற பெருஞ்செல்வம் இங்கில்லை. வேறு எங்கும் கூட அத்தகு ஒப்பற்ற செல்வம் இல்லை என்று இருக்கும் சொற்ப பொருளைக் கொண்டு நிறைவேற்ற முடியாமல் அல்லாடுவதைக் காட்டிலும், வேண்டாம் என்று விலக்குவது ஒன்று தான் உலகந் தழுவிய தீர்வாக இருத்தல் முடியும். அத்தீர்வுக்கு வருதலே விழுமிய செல்வம் தான் என்று விதந்துரைக்கிறது வள்ளுவம். தட்டுப்பாடு அதையே வேறொன்றாகக் பயன்படுத்தும் நிலையை உருவாக்கி விடுகிறது. எனவே, பொருளாதாரச் சிக்கல் என்பது இங்கு என்னை எப்படி பயன்படுத்தப் போகிறோம்? என்ற தேர்வு தான் என்கிறார் இராபின்சு.

எல்லாவிதப் பொருளாதாரச் சிக்கல்களுக்கும் இப்படித்தான் தோற்றம் பெறுகின்றன. எனவே, ‘பொருளாதாரம் என்னும் அறிவியல், ‘மாற்றுப் பயன்களுக்கு உட்படுத்தக்கூடிய பற்றாக்குறை நிதி ஆதாரங்களைக் கொண்டு எங்ஙனம் எண்ணிலடங்காது விரிந்து பரந்த மனிதத் தேவைகளை நிறைவு செய்வதென்று’ பரிசீலிக்கும் அறிவியலாகத் திகழ்கிறது எனும் இராபின்சின் வரையறை பொருளாதார நிபுணர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சிட்டாவ்ஸ்கி (scitovsky) சிடிக்லர்(stigler) கெயின்கிராஸ் (caincross) இலெர்னர் (Leerner) ஆகியோர் குறிக்கத்தக்கவர் ஆவர்.

‘அறிவியல் பூர்வ வரையறை’ என்றும் உலகெங்கும் பொருந்தக் கூடியது பிரிக்ஸ் (Briggs) ஜோர்பின் (Jordan) இராபின்சின் வரையறையைப் போற்றுவர். விக்சீடீட் (Wicksteed) இன்னும் ஒருபடி மேலே போய்,’ வாழ்வின் சட்டத்தை (law of life) வரையறுத்தது போன்று இருப்பதாகக் கொண்டாடுவார்.

இராபின்சு’ கிடைப்பருமை வரையறை’யும் விமரிசனங்களுக்கு அப்பாற்பட்டதாக அமையவில்லை. இதன் மீது வைத்துள்ள விடுபாடுகள் வருமாறு:-

- மனிதன், அவனது நலம் பற்றிச் சிறு குறிப்பு கூட இவ்வரையறையில் இடம் பெறவில்லை. இந்த வரையறையில், ‘மனிதம்’ (Human touch) என்பதே முற்றிலுமாக இல்லாமல் காணாது போயுள்ளது. என்று இலி. (Ely) கூறுவார்.
- மாற்றுப் பயன்களுக்கு உட்படுத்தக் கூடிய முடிவுகள் அப்படியொன்றும் ஒன்றற்கொன்று சமதகுதி இடை வெளியைப் பெற்றிருப்பதில்லை. அவற்றைப் பரிசீலிக்கும் பொருளாதாராம் நடுநிலைத் தன்மை பெற்றிருத்தற்கில்லை. ஒன்றைச் சரி என்று கொள்ளவும், ஒன்றைத் ‘தவறு’ என்று தள்ளவும் இடமளிக்கிறது.
- ‘கிடைப்பருமை’ என்பது நடைமுறையில் எல்லா தரப்பு மக்களிடமும் தாக்கத்தைத் தோற்றுவிப்பதில்லை.
- இராபின்சின் வரையறை ஒருபுறம் மிகுந்த குறுகலானதாகவும், மறுபுறம் உலகனைத்திற்கும் பொருத்திக் காண முயலும் மிகுந்த பரப்பினதாகவும் உள்ளதால், ‘நிறுவனக் குறைபாடுகள், அக்குறைபாடுகளால் முடக்கப்படும் நிதி ஆதாரங்கள்’ பற்றி ஆராய இடமளிக்கவில்லை. மேலும் பொருளாதாரஞ்சாராத

தளங்களுக்கும் (non-economic fields) நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் போது, அதையும் பரிசீலிக்க உதவுவதில்லை என்று இராபர்ட்சன் (Roberrson) விமரிசிப்பார்.

- நுண்ணியல் பரிசீலனைக்குப் பொருந்துமே அல்லாமல், பேரினப் பரிசீலனைக்குப் பொருந்துவதில்லை.
- கிடைப்பருமை, தட்டுப்பாடு என்பவற்றால் மட்டுமே எப்போதும் பொருளாதாரச் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. அவை கணக்கில் கொள்ளப்படவில்லை.
- பொருளாதார வளர்ச்சி' என்பது பொருளாதார அறிவியலில் மிக முக்கியமான ஒன்று. இராபின்சின் வரையறை அதை உள்ளடக்கியதாக அமையவில்லை.

இங்ஙனம் குற்றச்சாட்டுகள் அடுக்கிச் சொல்லப்பட்ட போதிலும்,பொருளியல் அறிஞர்கள் ஏற்கும் வரையறையாக இவ்வரையறை திகழ்வதை மறுப்பதற்கு இல்லை. இருக்கும் குறைவான நிதி ஆதாரத்தைக் கொண்டு எங்ஙனம் அதிகமாக வாங்குவது? எப்படி சிறப்பாகப் பயன்படுத்துவது? எனும் சிக்கல் பொருளாதாரச் சிக்கல்தான். இச்சிக்கல் ஒவ்வொரு வீட்டிலும் உள்ளது. அரசு இயந்திரத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உள்ளது அவ்வகையில் எல்லா இடங்களுக்கும். தளங்களுக்கும் இவ்வரையறை பொருந்துகிறது 'என்பார் வாட்சன்' (warson) எங்கே, எப்படி, எவ்விதப் பற்றாக்குறை ஏற்படுகிறது? என்று அடிப்படையில், 'பற்றாக்குறை-கிடைப்பருமை' பற்றி ஆராய்வதுதான் பொருளியல்' என்று ஸ்டாய்னரும் (stoiner) ஹேகும் (Hague) கூறுகின்றனர்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி' (குறள்.23.226)

தான் தேடிய பொருளைச் சேமிக்கும் கருவூலம் பொருள் அடாத பசியைத் தீர்ப்பது என்று மனிதர் மனிதரது நலம் குறித்து. 'மனிதம்' (Human toch) திருவள்ளுவரால்' கூறப்பட்டிருப்பது கருத்தக்கது.

"நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு '(குறள்.38.375)

செல்வத்தைச் செய்வதற்குரிய வழிமுறைகள் நல்லதாய் இருந்தவை தீயவை ஆதலும், தீயதாய் இருந்தவை நல்லவை ஆதலும் உண்டு. அவற்றைப் பரிசீலிக்கும் பொருளாதாரம் ஒன்றைச் சரி' என்று கொள்ளவும், ஒன்றைத் தவறு' என்று தள்ளவும் இடமளிப்பதை வள்ளுவம் குறிப்பிடுகிறது.

"நல்லாறு எனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (குறள்.23.222)

ஒருவரிடம் இருந்து பொருளைப் பெறுவது நல்லதுதான் என்றாலும் பெறுதல் தீமை: மேலுலக வாழ்வு இல்லை என்றாலும் கொடுத்தல் நல்லது' என்று, 'கிடைப்பருமை உடைய பொருள்' என்று கூறாது. 'ஒரே தாக்கத்தை அனைவரிடமும் கிடைப்பருமை ஏற்படுத்தாத நிலை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் (திருக்குறள்.22.217)

மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகி பயன்படுவது போல் செல்வம் பெருந்தன்மையுடையவனிடம் சேர்ந்தால் (non-economic fields) நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்து பயன்படுத்துதல் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

- அற்கா இயல்பிற்றுச் செல்வம் (குறள் 34.333)
- இருவே றுலகத் தியற்கை திருவேறு
  தெள்ளிய ராதலும் வேறு (குறள்.38.374)

- ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
  போகூழால் தோன்றும் மடி'  (குறள்.38.371)

செல்வம் நிலையற்ற இயல்பினது. செல்வம் உடையவராதல், செல்வம் அற்றவராதல் எனும் இருவேறு இயல்புகள் உலகில் உள்ளன. பொருள் ஆக்கத்திற்கான, 'ஆகூழ்' தளராத ஊக்கத்தைத் தோற்றுவிக்கும். கைப்பொருள் இழத்தற்கான, 'போகூழ்' சோம்பலை ஏற்படுத்தும்' என்று 'கிடைப்பருமை, தட்டுப்பாடு என்பவற்றால் மட்டும் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுவதில்லை. தளராத ஊக்கத்தால் செல்வம் உருவாதல், சோம்பலால் கைப்பொருள் இழத்தல், திருவுடையர், திருவற்றவர், செல்வ இயல்பு போல்வனவும் பொருளாதாரச் சிக்கல்களைத் தோற்றுவிப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

- பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள். 25.247)
- பொருளற்றார் பூப்பர் ஒருகால்  (குறள். 25.248)

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகில் இன்ப வாழ்வு இல்லை. பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் பொருள் உடையவராகப் பொலிதல் கூடும்' என்று பொருளின் இன்றியமையாமை. தனிநபர் பொருளாதார நிலையில் வளர்ச்சி பெறும் நிலை சொல்லப்பட்டுள்ளது.

**சாமுவேல்சனின் வரையறையும் வள்ளுவமும்:-** இராபின்சின் வரையறையில் சுட்டப்பட்ட விடுபாடுகளை அகற்றுவதாகப் பேராசிரியர் சாமுவேல்சனின், வளர்ச்சி சார்ந்த பொருளியல் வரையறை அமைந்தது. 'பொருளியல்' (Economics) என்பது அவரது நூலின் பெயர். 'எவ்வாறுமனிதர்களும் சமூகமும் பணத்தின் மூலகமா, பணமில்லாமலோ, அரிய மூல வளங்களைத் தேர்வு செய்து. அவை தமக்கென்று மாற்றுப் பயன்களைக் கொண்டிருப்பதால், அவற்றால் வெவ்வேறு பொருட்களைத் தயாரித்தல், நுகர்தல், பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றுடன் எதிர்காலத்தில் வெவ்வேறு மக்கள் மற்றும் சமூகத்தின் வெவ்வேறு குழுக்களிடையே தேர்வு செய்கின்றனர் என்று பரிசீலிக்கும் அறிவியல்' என்று வரையறுக்கிறார்.

ஒரு சமூகம். 'அரிசி, பருத்தி, விமானம், இசைக் கருவிகள் ஆகியவற்றைத் தயாரிக்க நினைத்தால், அவற்றுக்கான கச்சாப் பொருட்களாகவும், அடிப்படை மூல ஆதாரங்களாகவும், நிலம், கருவிகள், இயந்திரங்கள், தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன. எவ்வளவு தேவை என்பதையும், கையிருப்பு எவ்வளவு என்பதைம் பொறுத்து. போட்டியாளருள் திறனுடையோருக்கே உற்பத்தி வாய்ப்பு கிட்டுகிறது. எந்த எந்த தரப்பு மக்களுக்குத் தேவைப்படும் என்பதைப் பொறுத்தே உற்பத்தி, பகிர்வு, விற்பனை நடைபெறுகிறது. அவ்வகையில்.

- இராபின்சைப் போலவே சாமுவேல்சனும், 'கிடைப்பருமைத்' தன்மை மூல வளங்களில் இருத்தலை வலியுறுத்துகிறார்.
- சாமுவேல்சன், 'காலத்தின்' தேவைக்கேற்க' என்ற கூற்றினை இணைத்துள்ளதால், 'வளர்ச்சி, விழ்ச்சி, நலிவு எனக் காலப்போக்கிற்கேற்ற மாறுதல்கள் கணக்கில் கொள்ள வழிதந்திருப்பது குறிக்கத்தக்கது.
- மனிதரது தேவைகள், விருப்பங்கள் மாறுமியல்புடையன. காலப் போக்கில், புதுமை, நவீனம் (Taste, outlook and fashion) என்பதற்கேற்ப விருப்பங்களும், தேர்வுகளும் மாறுபடுகின்றன. அக்கூற்றினையும் சாமுவேல்சன் பரிசீலிப்பது குறிக்கத் தக்கது.

'கால கட்டத்துக்கேற்ப மாற்றமும், ஏற்றமும், பெற்றுவரும் வளர்ச்சிப் போக்கை' உள்ளடக்கியதில் சாமுவேல்சனுக்குப் பெரும் பங்குண்டு.

"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு'  (குறள்.49.482)

காலத்தின் மாற்றத்துக்கு ஏற்பச் செயல்படுதல். தம்மிடம் உள்ள செல்வம் நீங்காமல் பிணைத்துக் கட்டும் கயிறு ஆகும் என்று. 'காலமாற்றம்' குறிக்கப்படுகிறது.

"அருவினை என்ப உளவோ கருவியால்
காலம்அறிந்து செயின் (குறன்.49.483)

காலச்சூழலைக் கணக்கில் கொண்டு, உரிய கருவிகளைப் பயன்படுத்தி செயல்படுவது முன்னிறுத்தப்படுவது குறிக்கத் தக்கது.

**தேயும் நுகர்வு சட்டம்: மார்சலும் வள்ளுவரும்:** மனிதத் தேவைகளை 1. அடிப்படைத் தேவைகள் 2. சொகுசுத் தேவைகள் 3. அலங்காரத் தேவைகள் என வகைப்படுத்தலாம். உணவு, உடை, இருப்பிடம் அடிப்படைத் தேவைகள். நான்கு சக்கர வாகனம் சொகுசுத் தேவை. வைரத்தோடு அலங்காரத் தேவை எனலாம். குறிப்பிட்ட தரத்து மக்கள் பெறும் அடிப்படை, சொகுசு, அலங்காரத் தேவை நுகர்வுகளைப் பொறுத்து அவர்தம் வாழ்வுத்தரம் (standard of living) தீர்மானிக்கப்படுகிறது. ஒரு குடும்பம் எந்த அளவிற்கு இம்மூன்று தரத்துத் தேவைகளையும் நுகரும் வாய்ப்பு பெற்றுள்ளதோ. அதற்கியைய அக்குடும்பத்தை

- எளிய குடும்பம் (அ) அடித்தட்டுக் குடும்பம்
- நடுத்தரக் குடும்பம் (அ) நடுத்தரக் குடும்பம்
- பணக்காரக் குடும்பம் (அ) மேல் தட்டு குடும்பம்.

என்று வகைப்படுத்துகிறது எங்கல்சின் குடும்பச் செலவு விதி. (Engle's Law of family Expenditure) மனித இனத்தை ஏழை மக்கள், நடுத்தரவர்க்க மக்கள், மேல்தட்டு மக்கள் என்றும் வகைபாடு செய்கிறார். தேவை, நுகர்வு என்பன சார்ந்து பொருளை வாங்கும் நிலை ஏற்படுகிறது.

நுகர்வில் இரு நிலைகள் உண்டு. தான் ஒரு பொருளைப் பெற்றிருப்பதால், அதை நுகர்வதால் பெறும் நிறைவு முழுமையான நுகர்வு (Total utility) ஆகும். ஒருவர் ஐந்து ஆப்பிளைப் புசித்தால் அவர் பெறுவது முழுமையான நுகர்வு, ஐந்தாவது ஆப்பிளைப் புசித்திடும்போதுதான் அவருக்குப் போதும் எனும் உணர்வு தோன்றினால் அது, 'போதிய நுகர்வு (Marginal utility) ஆகும். நுகர்வுத் திருப்தி தேயும் இயல்பினது. (The Law of Diminishing Marginal utility) மனிதர் அனைவரும் இதை உணரவியலும்.

வறியவருக்கு முதலில் கிடைக்கும் சொற்பப் பொருள் தரும் நிறைவும், மகிழ்வும், முழுமையானது' 'போதியதுமானது. ஆனால் அவரிடம் மேன்மேலும் பொருள் குவியக் குவிய இவை தொலைந்து போகின்றன, 'போதும்' என்ற உணர்வோ, 'இவ்வளவுதான்' என்ற முழுமையோ ஏற்படுவதில்லை.

தேயும் நுகர்வுத் திருப்தி விதி

முதன் முதலாகச் சம்பாதிக்கும் நூறு ரூபாய் தரும் மகிழ்ச்சிடையயும், நுகர்வளவையும், பின்னாளில் சம்பாதிக்கும் கோடிகள் தருவதில்லை. தனக்கு வேண்டியது இன்னது, தேவைப்படுவது இன்னது என்று மனிதர் தீர்மானித்திடுவதில், 'நுகர்வுத் திருப்தி' பெரும்பங்கு வகிக்கிறது என்பது ஆல்பிரட் மார்சலின் கருத்து.

“ஏதிலார் ஆரத் தமர்பசிப்பார் பேதை
பெருஞ்செல்வம் விற்றக் கடை’ (குறள்.84.837)

பேதைக்குப் பெருஞ்செல்வம் கிடைத்தால், அவனுடன் ஒரு தொடர்பும் இல்லாத அயலவர் எல்லா நன்மையும் பெற, அவனது சுற்றத்தவர் உண்ணுதற்கும் இல்லாது பசித்திருப்பர்’ என்று செல்வம் யாரால் நுகரப்படும் என்று வள்ளுவம் சுட்டுகிறது.

“சீரினும் சீர் அல்ல செய்யாரே (குறள்.97.962)

“அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் (குறள்.96.954)

பலகோடிப் பொருளை அடுக்கிக் கொடுத்தாலும் சிறந்த குடியில் பிறந்கவர்கள் அந்தச் சிறப்புக் கெடுவதற்கான செயல்களுக்கு இடம் தரமாட்டார்கள்.

பொருட் பொருளார் (குறள்.92.914)
என்று பொருள் தேடுவதையே பொருளாக எண்ணி வாழ்பவரைச் சொல்லும் வள்ளுவம்.

“அறன் ஈனும் இன்பமும்ஈனும் திறன் அறிந்து
தீது இன்றி வந்த பொருள் (குறள்.76.754)

தீயவழியின்றி திறனுடன் சேர்த்த செல்வம் அறம், இன்பம் தரும் விதத்தை விளக்குகிறது.

“அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் (குறள்.76.755)

அருள், அன்புடன் வாராத பொருளை அணுக விடாமல் விலக்குவார் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. பொருள் தேவை என்பதற்காக, எவ்வழியிலேனும் பெறுவதையோ, நுகர்வதையோ விரும்பாமைக்கு, ‘நுகர்வுத் திருப்தி விதி’ காரணம் ஆகலாம்.

செல்வம் அணி என்ப நாட்டிற்கு (திருக்குறள்.74.738) எனும் வள்ளுவம் ‘தாழ்வு இலாச் செல்வர் சேர்வது நாடு (திருக்குறள். 74.731) நாடு என்ப நாபி வளத்தன (திருக்குறள்.74.739) பெரும்பொருளால் விளைவது நாடு (திருக்குறள்.74.732) என்று செல்வ வளமே நாட்டிற்கு உயர்வென்பதை உறுதியாகத் தெளிவுறுத்தும் வள்ளுவம்.

- எற்றென்று இரங்குவ செய்யற்க (குறள்.66.655)
- சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
  கலத்துள்நீர் பெய்து இரீஇ யற்று (குறள்.66.660)

என்று அறிவுறுத்துகிறது. அழக் கொண்ட எல்லாம் அடிப்போம், கடிந்த செய்தார்க்கு அவைதாம் முடிந்தாலும் பீழை தரும்’ புகழொடு நன்றி பயவா வினையை என்றும் ஒருவுதல் வேண்டும். என்று கூறுகிறது.

- ஈன்றாள் பசிகாண் பான் ஆயினும் செய்யற்க
  சான்றோர் பழிக்கும் வினை (திருக்குறள்.66.656)
- பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
  கழிநல்குரவே தலை (திருக்குறள்.66.651)

முழுசமன்மை, பகுதிசமன்மை (Equvibrium, Partial Equlibrium) என்பது உந்தித் தள்ளும் தேவை, கிடைக்கும் மூலவளம் எனும் இரண்டனுக்கிடையிலான சமன்மை பொருளியலில் குறிக்கத்தகு இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் இதைப் பொறுத்தே மனிதரது பொருள் தேர்வும், நுகர்வும் அமைகிறது. ஈன்றாளின்பசி, சான்றோரின் கழிநல்குரவு உந்துவரிசைகளாக இயக்க, பழிமலைந்து ஆக்கம் எய்துதல், சான்றார் பழிக்கு வினை செய்தல் என்ற நிலைப்பாடுகளைத் தேர்வு செய்து நுகர்வுத் தேவையை நிறைவு செய்யாமல்,

‘விழுமியத்தைக் காத்த பெருமித நிறைவு பெறல்’ என்று மனிதரது செயல்கள் அமைவதை வள்ளுவம் சுட்டுகிறது.

- பொருளைப் பொருளாகச் செயல்வதையே வாழ்வியல் நெறியாகக் கொண்டு சிலர் வாழ்வதும்
- அடுக்கிய கோடி கிடைப்பினும், அவற்றை உதறி கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டுடன் சிலர் வாழ்வதுமான மனித நடத்தைசார் பொருளியல்

பரிமாணத்தை வள்ளுவம் முன்னிறுத்துவது கருதத் தக்கது.

முடிவுரை

எது பொருளாதாரக் கருத்தாக்க நெறி? எதைப் பரிசீலிப்பதாக இருந்தால் முழுமையும் நிறைவும் பெறும்? என்று பரிசீலித்துக் கருத்துகளை வெளிப்படுத்தி, பொருளாதார அறிவியல் துறையின் நான்கு தூண்களாகத் தம்மை நிலைப்படுத்திக் கொண்ட ஆடம்ஸ் ஸ்மித், ஆல்பிரட்மார்சல், இலயனல் இராபின்சு, சாமுவேல்சன் ஆகிய மேற்கத்திய அறிஞர்தம் கருத்தாக்கங்களைத் தம்முள் வசப்படுத்தியதாய், சிந்தனை வீச்சின் வெளிப்பாடு புலப்படுந் தன்மையதாய் வள்ளுவம் திகழ்வது கருதுதற்குரியது. பொருள் தேடும் வேட்கை மனிதரிடையே வேறுபட்ட செயலூக்கியாய் அமைவதைத் தெளிவுறுத்தும் ஆல்பிரட் மார்சலின் நுகர்வ திருப்தி விதியை வள்ளுவம் தொட்டுச் செல்வதும், மக்கள் மனங்கொள்ளத் தகுவிதத்தில் எல்லாப் பரிமாணங்களையும் புலப்படுத்தித் தன்னும் தான் முழுமையுடையதாய், நிறைவூட்டும் விதத்தில் வள்ளுவம் அமைந்திருப்பது உவகையளிக்கிறது.